**த. நா.ச.பே. எண் : 007** **நாள் : 08.07.2019**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி**
அவர்களின் அறிக்கை – 8.7.2019

---

**பள்ளிக் கல்வித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

இந்த உலகத்தையே மாற்றக் கூடிய சக்தி வாய்ந்த கருவி கல்விதான். ஒருவனுக்கு அழிவில்லாத பெருஞ்செல்வமும் கல்விதான். இத்தகைய இன்றியமையாத சிறப்புடைய கல்வியை தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகள் அனைவரும் பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடும், கல்லாதவர்களே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிட வேண்டும் என்ற குறிக்கோளுடனும், மாண்புமிகு புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் வழியில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் தரமான கல்வியைப் பெறும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள சில புதிய திட்டங்கள் குறித்து நான் இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

**1.** அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, நடப்பாண்டில் 124 கூடுதல் வகுப்பறைகள், 83 அறிவியல் ஆய்வகங்கள், 85 நூலக அறைகள், 84 கலை மற்றும் கைவினை அறைகள், 50 கணினி அறைகள், 92 மாணவர் கழிப்பறைகள், 104 மாணவியர் கழிப்பறைகளை புதிதாக கட்டுதல், 1,475 மாணவர் கழிப்பறைகளையும், 1,849 மாணவியர் கழிப்பறைகளையும் பழுது பார்த்தல், 149 பள்ளிகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல், 132 பள்ளிகளுக்கு 4,493 மீட்டர் நீளமுள்ள சுற்றுச் சுவர் எழுப்புதல், 1,649 மாற்றுத்திறன் மாணவர்களுக்கான கழிப்பறைகள் அமைத்தல், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கென கைப்பிடியுடன் கூடிய 5,726

சாய்வு தளங்கள் அமைத்தல் மற்றும் 156 பள்ளிகளில் உள்ள வகுப்பறைகளை பழுது பார்த்தல் ஆகிய பணிகள் **163 கோடியே 45 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

**2.** இந்தியாவின் அறிவுசார் மையமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்ற நோக்கத்துடன் மாண்புமிகு அம்மா அவர்கள் "தொலைநோக்கு பார்வை 2023"–ஐ வெளியிட்டார்கள். காலத்திற்கேற்ப மாற்றங்களை புகுத்தி, 12–ஆம் வகுப்பு வரையிலான கலைத் திட்டம் மற்றும் பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டம் மற்றும் கலைத் திட்டத்தின்படி 2, 3, 4, 5, 7, 8, 10 மற்றும் 12–ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடப் புத்தகங்கள் 2019–20–ஆம் கல்வியாண்டின் பயன்பாட்டிற்கென அரசால் தயாரிக்கப்பட்டு உள்ளது. பாடப் பொருள் சார்ந்த கூடுதல் தகவல்கள், மாணவர் செயல்பாடுகள், படங்கள், மதிப்பீடு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பகுதிகள் போன்றவை உள்ளீடு செய்யப்பட்டு, செறிவூட்டப்பட்ட பாடப் புத்தகங்களாக இப்புத்தகங்கள் விளங்குகின்றன. இப்புத்தகங்களை ஆசிரியர்கள் சீரிய முறையில் பயன்படுத்தவும், அதன் மூலம் மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்திடவும், கற்றல் விளைவுகளை ஆய்வு செய்து, கற்றலில் உள்ள கடினமான பகுதிகளைக் கண்டறிந்து, அதற்கு ஏற்றவாறு திட்டமிட்டு, வகுப்பறை செயல்பாடுகளை மேம்படுத்திட, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவி புரியும் வகையில், **தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 61 கோடியே 63 லட்சம் ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.**

**3.** மாணவ, மாணவியரின் நலனில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்ய, **2,650 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 244 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி ஒன்றிற்கு 75 ஆயிரம் ரூபாய் வீதம் 21 கோடியே 71 லட்சம் ரூபாய்**

**செலவில் கண்காணிப்பு கேமரா (CCTV) வசதி அமைத்துத் தரும்.** இத்திட்டத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள பள்ளிகள், மாணவியர் பள்ளிகள் மற்றும் தேர்வு மையங்கள் உள்ள பள்ளிகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**4.** அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா காலணிகள் வழங்கும் திட்டம் இவ்வரசால், **2012–13** கல்வியாண்டு முதல் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் **6** முதல் **10–**ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு **ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் காலணிகளுக்குப் பதிலாக, 2020–21–ஆம் கல்வியாண்டு முதல் ஷூ மற்றும் சாக்ஸ் (Shoes and Socks) 10 கோடியே 2 லட்சம் ரூபாய் கூடுதல் செலவில் வழங்கப்படும். இதனால் 28 லட்சத்து 64 ஆயிரத்து 885 மாணவ, மாணவியர் பயன் பெறுவர் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

பள்ளிக் கல்வித் துறை மூலம் இவ்வரசு செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டங்களால், பள்ளி மாணவ, மாணவியர், உரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பள்ளிகளில், மிகவும் உகந்த சூழலில், தரமான கல்வி கற்க வழி வகுக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## உயர் கல்வித் துறை

1. தமிழ்நாட்டில் உள்ள 112 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பெரும்பாலானவை தேசிய தர மதிப்பீட்டு சான்றிதழ் (NAAC) பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. **இந்த தேசிய தர மதிப்பீட்டு சான்றிதழ் பெறும் வகையில், மேலும் 10 அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 54 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.**

**2. 1965–**ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கல்லூரிக் கல்வி இயக்ககம், 54 வருடங்களாக தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்கு சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த இயக்ககத்திற்கு தனியானதொரு கட்டடம் ஏற்படுத்திக் கொடுத்து, மின் ஆளுமை, கல்வி சீர்திருத்த நடவடிக்கைகள் ஆகியவற்றை முழுமையாக நிறைவேற்ற ஏதுவாக **கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கான நிர்வாக கட்டடத்துடன், சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்ககத்திற்கான அலுவலக கட்டடமும் சேர்த்து 3,534 சதுர மீட்டர் பரப்பளவில் 10 கோடி ரூபாய் செலவில் சென்னை, சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் கட்டப்படும்.**

3. **இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் உள்ள ராஜூஸ் கல்லூரி ஆகியவற்றை** முன்மாதிரி கல்லூரிகளாக மேம்படுத்தி, அதில் புதிதாக இளங்கலை, முதுகலை பாடப் பிரிவுகள் தோற்றுவித்தல், புதிதாக வகுப்பறைகள் கட்டுதல், இருக்கும் வகுப்பறைகளை புதுப்பித்தல், புதிய ஆய்வுக்கூடம் கட்டுதல், ஆய்வுக்கூடத்தை புதுப்பித்தல், கணினிமயமாக்கப்பட்ட நவீன நூலகம் அமைத்தல், புதிய கருத்தரங்கம் கட்டுதல் மற்றும் வளாக மேம்பாடு ஆகிய **பணிகள் தலா 4 கோடி ரூபாய் வீதம் 8 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

4. கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 98 அரசு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதில் 92 அரசு கல்லூரிகள் சொந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்த 92 அரசு கல்லூரிகளுக்கு தொடர்ந்து **பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக சிறப்பு மானியமாக ஆண்டொன்றிற்கு 58 கோடி ரூபாய் வீதம் 2 ஆண்டுகளுக்கு 116 கோடி ரூபாய் வழங்கப்படும்.** இதன் மூலம், சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரம் மாணாக்கர்களுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் கல்வி சூழல்கள் வெகுவாக மேம்படுத்தப்படும்.

5. **கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தில்** 10 வகுப்பறை கட்டடங்கள், கருத்தரங்கு கூடம் மற்றும் பொது கருவிமயமாக்கல் ஆய்வுக் கூடம், சுற்றுச்சுவர், துணைவேந்தர், பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர் மற்றும் கல்விசார் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் **30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

6. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிகளை உலக தரத்திற்கு மேம்படுத்த அதிநவீன உபகரணங்களுடன் கூடிய ஒரு **மையம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

7. **பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில்** உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, பல்கலைக்கழக **அறிவியல் கருவிமயமாக்கல் மையம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

****

## எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**1.** அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், மின் கட்டமைப்பு மேலும் பல ஆண்டுகள் வலுவாக இருப்பதை உறுதி செய்யும் வகையிலும், சென்னையில் தலா **730 மெகாவாட் மின் உற்பத்தி திறனுள்ள இரண்டு கூட்டு சுழற்சி முறையிலான எரிவாயு சுழலி மின் நிலையங்கள்**, **சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய்** மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதற்கட்டமாக, இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

**2.** மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை கருத்தில் கொண்டும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டும் தற்பொழுது இயக்கத்தில் உள்ள **ஐந்து அனல் மின் நிலையங்களில் இருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் தூசுகள் காற்றில் கலப்பதைக் கட்டுப்படுத்த, 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய உபகரணங்கள் நிறுவப்படும்.**

**3.** திருவண்ணாமலை மாவட்டம் **வெம்பாக்கம்,** நாமக்கல் மாவட்டம் **நல்லூர்** மற்றும் திருநெல்வேலி மாவட்டம் **நாங்குநேரி** ஆகிய **3 இடங்களில் 230 கி.வோ. புதிய துணை மின் நிலையங்கள் 510 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு அமைக்கப்படும்.**

4. சென்னை மாவட்டம் **ஏ.ஆர்.எஸ். கார்டன்,** தஞ்சாவூர் மாவட்டம் **திருவையாறு**, விழுப்புரம் மாவட்டம் **பூத்தமேடு**, பெரம்பலூர் மாவட்டம் **கைகளத்தூர்**, கோயம்புத்தூர் மாவட்டம் **செங்கத்துறை** மற்றும் சேலம் மாவட்டம் **ஆடையூர்** ஆகிய **6 இடங்களில் இந்த ஆண்டு 110 கி.வோ. புதிய துணை மின் நிலையங்கள், 135 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

5. மின் கட்டமைப்பை வலுப்படுத்த, **380 கோடி ரூபாய்** மதிப்பீட்டில் **47 இடங்களில் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும்.** மேலும், செயல்பாட்டில் இருக்கும் **33/11** கி.வோ. துணை

மின்நிலையங்களில்

**69 மின்மாற்றிகள் கூடுதலாகவும், திறன் உயர்த்தியும் நிறுவப்படும்.**

**6.** மின் கட்டமைப்பில் மின்னழுத்தம் சீராக இருக்கவும், சராசரி தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பீட்டை குறைப்பதற்காகவும் **500 கோடி** ரூபாய் மதிப்பீட்டில் **50 ஊரக மின்னூட்டிகளில் உயர் மின்னழுத்த விநியோக அமைப்பு** நிறுவுவதன் மூலம் உயரழுத்தம் மற்றும் தாழ்வழுத்தத்திற்கான நீள இடைவெளி விகிதாச்சாரம் (HT/LT Ratio) குறைக்கப்படும்.

**7.** நாகப்பட்டினம், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் இயற்கை சீற்றங்களின் போது மின் கம்பங்கள் சாய்ந்து அதனால் மின் விநியோகம் தடையாகும் சூழ்நிலை உருவாகிறது. இந்நிலையை களைந்து சீரான மின் விநியோகத்தை உறுதி செய்ய **33 கி.வோ. துணை மின் நிலையங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லும் மின் பாதைகளில் முதற்கட்டமாக சுமார் 100 கி.மீ. மின் பாதை 300 கோடி** மதிப்பீட்டில் **புதைவடங்களாக மாற்றப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**8.** தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் உள்ள 250 உதவி பொறியாளர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும். மேலும், இந்த நிதி ஆண்டிலிருந்து இயக்கப்படவிருக்கும் **வட சென்னை அனல் மின் நிலையம் நிலை–III-**ற்காக **150 உதவி பொறியாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு, நேரடி பணி நியமனம் மூலம் நிரப்பப்படும்.**

**9.** தமிழ்நாடு எரிசக்தி முகமைக்கு (TEDA) **5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சொந்த கட்டடம் கட்டப்படும்** இது ஒரு, மாதிரி பசுமை கட்டடமாகத் திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**